**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
**2026** ம் ஆண்டு **ஜூன்** திங்கள் **6** ஆம் நாள் **சனிகிழமை**
**IA.1/2026 in OS. No.249/2023**

K.ஜெயபிரகாஷ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

G.சிவக்குமார் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக 05.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.K.காளிதாஸ்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் வழக்கறிஞர் **திரு.K.கணேஷ்குமார்** அவர்கள் ஆஜராகியும், மனுஉரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா வழக்கானது இன்று 09.02.2026 ம் தேதி கட்டாய விசாரணைக்காக ஏற்பட்டிருக்கும் விசாரணை வாய்தாவை சிறப்பு விசாரணைப் பட்டியலில் இருந்து நீக்கரவு செய்யக் கோரி பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

– – – – –

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது தரப்பில் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி வருகி வரும் நிலையில் தாவா வழக்கில் இன்று 09.02.206 ம் தேதி வாதியான தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருப்பதாக மனுதாரர்/வாதி வழக்கறிஞர் தகவல் தெரிவித்தார்கள். இந்நிலையில் தாவா வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தபோது ஷை எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவை என்றும் பொய்யானவை என்றும் தெரியவந்தது. ஷை எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகளுக்கு மனுதாரர்/வாதி தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரர்/வாதி இத்துடன் எனது தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேலும் ஷை பதில் வழக்குரையை தாவா வழக்கில் உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தற்பொழுது தாக்கல்

செய்துள்ளதை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி தனியாக மனுத் தாக்கல் செய்துள்ளார். எனவே தாவா வழக்கானது இன்று 09.02.2026 ம் தேதி கட்டாய விசாரணைக்காக ஏற்பட்டிருக்கும் விசாரணை வாய்தாவை சிறப்பு விசாரணைப் பட்டியலில் இருந்து நீக்கரவு செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் இருக்கிறது. அவ்வாறு இல்லாதபட்சத்தில் எனக்கு அனேக இன்னலும் ஈடு செய்யமுடியாத இழப்பும் நேரிடக்கூடியதாக இருக்கிறது. தாவா வழக்கானது இன்று 09.02.2026 ம் தேதி கட்டாய விசாரணைக்காக ஏற்பட்டிருக்கும் விசாரணை வாய்தாவை சிறப்பு விசாரணைப் பட்டியலில் இருந்து நீக்கரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கலாயிற்று.

3) **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்**

இந்த மனுவானது நடவடிக்கைகளை நீட்டிப்பதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மாண்புமிகு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேற்கண்ட வழக்கை மனுதாரர்/வாதி வெற்றிகரமாகத் தாமதப்படுத்தியுள்ளார் என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது. பிரதிவாதி/மனுதாரர் 27.03.2024 அன்று எழுத்துப்பூர்வமான பதில் மனுவைத் தாக்கல் செய்து கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்குப் பிறகு, மேற்கண்ட பதில் மனுவைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணத்தை மனுதாரர் சிறிதும் விளக்கவில்லை என்று பணிவுடன் சமர்ப்பித்துள்ளார். மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் சரியாகவே தீர்ப்பளித்துள்ளது, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ஆணை 8 விதி 9 ன் கீழ் ஒரு மனுவை தள்ளுபடி செய்வதற்குத் தாமதம் ஒரு காரணமாகாது என்றாலும், அத்தகைய பதில்/கூடுதல் அறிக்கையைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தை மனுதாரர் முறையாக விளக்க வேண்டும். எனவே இந்த மனு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். இந்தப் பிரதிவாதி, போதுமான சான்றுகளைச் சமர்ப்பித்து இந்த மாண்புமிகு நீதிமன்றத்தின் முன் நிரூபிப்பதாகத் அவரது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் அவரது தற்காப்பு வாதங்களை முன்வைத்தார். அதேபோல, சட்டத்தில் சமமாக இவ்வாறு ஒரு விதி இருக்கும்போது வாதி அவரது வழக்கைச் சாட்சியங்களை முன்வைத்து நிரூபிக்கவோ அல்லது மறுக்கவோ எப்போதும் வாய்ப்பிருந்தாலும், இதற்கு வெறும் மறுப்புரைகளை அளித்து, இந்த பிரதிவாதியைக் குறுக்கு விசாரணை செய்வதன் மூலம், ஆணை 8 விதி 9 இன் கீழ் பிரதிவாதியின் எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வது அனுமதிக்கப்படாது, குறிப்பாக இந்த பிரதிவாதியால் வாதிக்கு எதிராக எந்தவொரு குறிப்பிட்ட "ஈடுசெய் கோரிக்கை" அல்லது "எதிர் கோரிக்கை" முன்வைக்கப்படாதபோது. எனவே, இந்தக் காரணத்தின் அடிப்படையிலும் மேற்கண்ட மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ஆணை 8 விதி 9 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேற்கண்ட மனுவானது, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட பிற்கால நிகழ்வுகள் தொடர்பாக மட்டுமே, பிரதிவாதியின் எழுத்துப்பூர்வமான பதில் மனுவிற்குப் பிறகு எந்தவொரு தரப்பினரும் பிற்கால வாதங்களைத் தாக்கல் செய்வதற்கு வழிவகை செய்கிறது என்றும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் எழுந்த உண்மைகள் குறித்த எந்தவொரு வாதங்களையும் மனுதாரர் அவரது தற்போதைய பதில் மனுவில் முன்வைக்கவில்லை என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட பதில் மனுவை இந்த மாண்புமிகு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக்

கூடாது, ஆகையால் மேற்கண்ட மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

(1) இம்மனு அனுமதிக்கக் கூடியதா?

(2) மனுதாரருக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) **தீர்வு**

(6–i) மனுஉரையும், எதிர்உரையும் பரிசீலிக்கப்பட்டது.

(6–ii) இம்மனு வாதுரை சமயத்தில் மனுதாரர்/வாதி தரப்பில் மனு உரையில் சொல்லிய சங்கதிகளையும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்உரையில் சொல்லிய சங்கதிகளையும் உட்படுத்தி வாதுரை மேற்கொள்ளப்பட்டது. வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் பதில் வழக்குரையானது பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியானது கடந்த 16.07.2025 ஆம் தேதியில் வழக்கின் தீர்வுக்காக எழுவினாக்கள் வனையப்பட்டது. மேலும் வழக்கானது விசாரணை பட்டியலில் சேர்க்கப்பட்டு 09.02.2026 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில், வழக்கின் வாதியான/இம்மனுதாரர் அசல் வழக்கை விரைந்து முடித்திட வேண்டி CRP (MD) No.44/2026 Dated 21.01.2026 ன் படி மனு தாக்கல் செய்து உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் 09.02.2026 அன்று மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கானது விசாரணைக்கு கொண்டு வரப்படாமல் உள்ளது. மனுதாரர்/வாதியால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் பதில் வழக்குரையை பரிசீலிக்கும் பொழுது, அசல் வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பே தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பதில்வழக்குரையில், வழக்கிற்கும், எதிர்வழக்குரைக்கும் அப்பாற்பட்ட சங்கதிகள் எதுவும் சொல்லப்பட்டதாக இல்லை. எனவே வழக்கில் தொடர்புடைய சங்கதியாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்தும் இம்மனுவை அனுமதிக்கக் கூடியதாக உள்ளது என்றும் தீர்மானித்தும் பிரச்சனை எண்.1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில், இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவு இல்லை. இ.ம.எண்.1/2026 ல் வழங்கப்பட்ட உத்தரவு இ.ம.எண்.2/2026 க்கு சேர்த்து வாசித்துக்கொள்ள வேண்டியது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 6 ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** – இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்** – இல்லை

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
**IA.1/2026 in OS. No.249/2023**
**உத்தரவு நாள் – 06.06.2026**